Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்பு ஆணையர் (பொ), அவர்களின் நடவடிக்கைகள்
807, அண்ணா சாலை, சென்னை-600 002.
முன்னிலை: திரு. ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப.,
www.tn.gov.in/dtcp
email id: dtcp@vsnl.net

ந.க.எண்.15467/2016/பிஏ1

நாள்: 10.01.2017

பொருள்: நகர் ஊரமைப்புத்துறை - சென்னை 2 - கட்டிடம் - மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் - மதுரை மாநகராட்சி, பொன்மேனி கிராமம் - சர்வே வார்டு-XXIII - பிளாக் - 25, T.S.No.17/10-ல் (R.S.No.133/7C) 1727.20 சமீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு மனையிட ஒப்புதலும் - அம்மனையில் தரைத்தளம் + 3 தளங்களில் 24 குடியிருப்புகள் கட்டிடம் கட்ட கட்டிட/திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது - தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் திரு.S.Kannan மற்றும் 2 நபர்கள் விண்ணப்பம் நாள் 29.08.2016, 07.10.2016 மற்றும் 30.12.2016
2. உறுப்பினர் செயலர் (பொ), மதுரை உள்ளூர் திட்டக் குழும கடிதம் ந.க.எண்.1906/2016 மதி-2, நாள்.16.12.2016
3. அரசாணை (நிலை) எண்.86, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:28.3.2012
4. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7486/09/பிஏ2, நாள்:16.4.2009
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21075/09/பிஏ1, நாள்:04.04.2012
6. 21.10.2016 அன்று நடைபெற்ற 34th EC கூட்டம், கூட்டப் பொருள் எண்.5-ன் நிகழ்ச்சிப் பதிவு.

Technical clearance issued
is valid after payment of
I&A charge and permission of

*****

உத்திரவு:

மதுரை உள்ளூர் திட்டக் குழுமம், மதுரை மாநகராட்சி, பொன்மேனி கிராமம் - சர்வே வார்டுXXIII, பிளாக் - 25, T.S.No.17/10-ல் (R.S.No.133/7C) 1727.20 சமீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு A முதல் F வரை என எல்லையிட்டப்பட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட பரப்பு விவரங்கள் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

Area Statements

1.	உத்தேச தரைத்தளம்	705.62 சமீ	6குடியிருப்புகள்
2.	உத்தேச முதல் தளம்	666.27 சமீ	6குடியிருப்புகள்
3.	உத்தேச இரண்டாம் தளம்	666.27 சமீ	6குடியிருப்புகள்
4.	உத்தேச மூன்றாம் தளம்	666.27 சமீ	6குடியிருப்புகள்
5.	மேல் கூரைத்தளம்	18.98 சமீ	
	மொத்த கட்டிட பரப்பு	267561. மீ	

FSI Area - 2545.81சமீ

For VISVAS PROMOTERS PRIVATE LTD.,

GENERAL MANAGER

மேலும், 21.10.2016 அன்று நடைபெற்ற 34வது Empowered Committee கூட்டத்தில் கூட்ட பொருள் எண்.5 ஆக வைக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

" The Committee discussed in detail and decided to relax road width violation since the applicant has proposed to use one 7m road for entry purpose ad another 7m road for exit purpose".

மேற்கண்ட உத்தேச குடியிருப்பு கட்டிடம் உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கட்டட/திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.10/2017 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations
2. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."
4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

5. The provisions in the G.O.(Ms).No.17; Housing and Urban Development (UD4)(3) Department dated:05.2.2016 relating to installation and use of solar energy system should be followed.

<u>நிபந்தனைகள் :</u>

1) உத்தேச குடியிருப்பு கட்டிடம் உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water heating System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்:3.11.04-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்
12) உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன் படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 4, மற்றும் 5-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் பார்வை 3-ல் காணும் அரசாணையின்படி உரிய நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக் குழுமத்தால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் அவர்கள் மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

For VISVAS PROMOTERS PRIVATE LTD.,

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு உறுப்பினர் செயலர் (பொ) மதுரை உள்ளூர் திட்டக் குழும அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

<u>இணைப்பு:</u>

1. மூன்று தொகுப்பு வரைபடங்கள் (3X3=9 வரைபடங்கள்)
2. பார்வை 6-ல் காணும் Empowered Committee கூட்ட நிகழ்ச்சிப் பதிவின் நகல் -1.

(ஒம்)/- ஷம்பு கல்லோலிகர்
நகர் ஊரமைப்பு ஆணையர் (பொ)

பெறுநர்:
உறுப்பினர் செயலர் (பொ),
மதுரை உள்ளூர் திட்டக் குழுமம்,
மதுரை.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

11/1/17

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

11/1/17

அனுப்புநர்	பெறுநர்
திரு.ப.யோகராஜா, பி.இ., உறுப்பினர் செயலர் (பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம், 3-ம் தளம், அண்ணாமாளிகை, மதுரை - 2. E.mail –ID : mlpa_ctcp@yahoo.in www.tn.gov,in/dtcp	திரு.எஸ்.கண்ணன், திரு.எஸ்.பாலசுப்ரமணியன், திரு.எஸ்.சக்திபாரதி, த/பெ.(லேட்) சண்முகம் பிள்ளை, கதவு எண்.13, மயிலகம் காம்பவுண்டு, இருளாண்டி தேவர் காலனி, விராட்டிபத்து, மதுரை.
ந.க.எண்.1906/2016/மதி.2	நாள் 24.03.2017

ஐயா,

பொருள் : குடியிருப்பு சிறப்பு கட்டிடம் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் மதுரை மாநகராட்சி - பொன்மேனி கிராமம் வார்டு-XXIII, பிளாக்-25, T.S.No.17/10 (R.S.No.133/7C) -ல் 1727.20 ச.மீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு மனை ஒப்புதலும் அம்மனையில் தரைதளம் மற்றும் 3 தளங்களில் 24 குடியிருப்பு கட்டிடம் கட்ட திட்ட அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 1)மனுதாரர் திரு.எஸ்.கண்ணன் (ம) 2 நபர்கள் விண்ணப்பம் நாள் 29.8.2016, 7.10.2016 (ம) 30.12.2016
2)மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானம் எண்.7/2017 நாள். 9.3.2017
3)உள்ளூர் திட்டக்குழும திட்ட அனுமதி எண். 9A/2017 முதல் 9C/2017 வரை. நாள்.24.03.2017

மேற்காண் பொருள் தொடர்பாக பார்வை 2-ல் கண்ட மதுரை உள்ளூர் திட்டக்குழும தீர்மானத்தின்படி மேற்படி உத்தேசத்திற்கு திட்டஅனுமதி வழங்கி உத்தரவு மற்றும் வரைபடங்கள் ஆணையாளர், மதுரை மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்துடன் உள்ளாட்சியை அணுகி இறுதி ஒப்புதலுடன் திட்டஅனுமதி உத்தரவினையும் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ)
மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்

For VISVAS PROMOTERS PRIVATE LTD.

GENERAL MANAGER

Enclosure-12

மதுரை மாநகராட்சி

மண்டலம்-1

இணையதள கட்டிட உரிமையாணை உத்திரவு

க.வி.எண்: ம1எ8/4393/2017 கட்டிட உ.ஆணை எண்: ம1/365/2017 நாள்: 05.06.2017

1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 276 வது பிரிவின் கீழ் சேர்க்கப்படும் கட்டிடத்தின் உரிமையாணை வழங்குதல் சம்பந்தமாக.

மனுதாரரின் பெயர் : S.பாலசுப்பிரமணியன், S.சக்திபாரதி & K.சுந்தரி,க/பெ.லேட்.S.கண்ணன்
தெருவின் பெயர் : பொன்மேனி கிராமம், மதுரை
கதவு எண் : நில அளவை எண்: T.S.No: 17/10 (Old S.F.No: 13377C) வட்டம் எண்: 19
காலிமனை/வீட்டுவரி விதிப்பு எண் : VST: 4193042, 4193044 to 4193047
மனு பெற்ற நாள் : 31.05.2017
இணையதள கட்டிட அனுமதி எண் : MCTPWZ(5433)17
கட்டிடத்தின் வகை : குடியிருப்பு
கட்டிடத்தின் பரப்பளவு

ஸ்டில்ட் தளம்	: 657.45 ச.மீ	உறுப்பினர் செயலர் மதுரை உள்ளூர் திட்டக் குழுமம் செயல்முறை ஆணை எண் ந.க.எண்: 1906/2016/மதி2 நாள் 24.03.2017ல் திட்ட அனுமதி எண் 9A/2017 முதல் 9C/2017வரை வழங்கப்பட்டுள்ளது.
முதல் தளம்	: 666.37 ச.மீ	
இரண்டாம் தளம்	: 666.37 ச.மீ	
மூன்றாம் தளம்	: 666.37 ச.மீ	
ஹெட்ரூம்	: 18.97 ச.மீ	
மொத்தம்	: 2675.53 ச.மீ	

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விபரம் பின்வருமாறு

		தொகை	பற்றுச் சீட்டு எண்	நாள்
வரைபட பரிசீலனை கட்டணம்	:	1,500.00	466773	24.04.2017
உரிமையாணைக் கட்டணம்	:	1,47,800.00	466773	24.04.2017
கட்டிட பொருள் சேமிப்புக் கட்டணம்	:	1,47,800.00	466773	24.04.2017
கட்டிடம் இடிப்பதற்கான கட்டணம்	:	--	--	--
சேவைக் கட்டணம்	:	500.00	466773	24.04.2017
பாதாள சாக்கடை பங்களிப்பு தொகை	:	1,20,000.00	349790	24.04.2017
சாலை அமைப்புக் கட்டணம்	:	47,000.00	466774	24.04.2017
உள் கட்டமைப்பு அபிவிருத்தி கட்டணம்	:	1,71,250.00	466775	24.04.2017
அபராத கட்டணம்	:	--	--	--
தபால் கட்டணம்	:	100.00	466773	24.04.2017
தொழிலாளர் நல நிதி கட்டணம்	:	1,36,300.00	379905	21.04.2017
உள்ளூர் திட்ட குழுமம் அபிவிருத்தி கட்டணம்	:	--	--	--
மனை ஒப்புதல் கட்டணம்	:	300.00	466776	24.04.2017

உத்திரவு

இதில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி கோரிய கட்டிட வேலைகளுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின் படி / மாறுதல் செய்துள்ள வரைபடத்தின்படி உரிமையாணை வழங்கப்படுகிறது.

அனுமதி நாள் முதல் ஆறு மாதத்திற்குள் கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த அனுமதி பிறப்பித்த நாள் முதல் இரண்டு ஆண்டு காலத்திற்கு அமலில்லிருக்கும்.

அனுமதி பிறப்பித்த நாள் முதல் இரண்டு ஆண்டுக்குள் கட்டிட வேலை முடிக்கப்பட வேண்டும். அரசாணை எண் 140 (நகர்மற்றும் கு.வ.துறை) நாள்:11.10.2002 ன்படி மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். வரைபட அனுமதி முடிவுறும் நாள்: 04.06.2019.

சிறப்பு நிபந்தனைகள்

பெறுவர்:
திரு./திருமதி.S.பாலசுப்பிரமணியன்,S.சக்திபாரதி &
K.சுந்தரி, க/பெ.லேட்.S.கண்ணன்
இருளாண்டிதேவர் காலனி, விராட்டிபத்து, மதுரை.

5-6-17

உதவி செயற்பொறியாளர் (திட்டம்)
(மண்டலம் 1)

For VISVAS PROMOTERS PRIVATE LTD.,
GENERAL MANAGER

நகல்: உதவி பொறியாளர்(திட்டம்) /இளநிலை பொறியாளர்(திட்டம்) கட்டிடம் கட்டுமானத்தை கண்காணிக்க
(பொது நிபந்தனைகள் பின்பக்கம் பார்க்க)

பொது நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் அடித்தளமானது (Plinth) மனையின் மட்டத்திலிருந்து 45 செ.மீ குறைவாக இருத்தல் கூடாது படிக்கட்டு, குறடு, சூரிய மறைவு போன்றவை மனுதாரின் மனை வரம்புக்குள் இருத்தல் வேண்டும் எவ்வகையான ஆக்கிரமிப்புகளும் அரசினர் அல்லது மாநகராட்சி நிலத்திலோ அல்லது தெருவிலோ செய்யக்கூடாது.
2. சூரிய மறைவு, சாளரச் சாய்ப்பு, வீட்டிறப்பு அல்லது அதைபோல் கட்டிடத்திலிருந்து நீட்டி வரும் எந்த பகுதியும் தெருச்சாலையில் மேல் அமைத்தல் கூடாது.
3. ஈரம் ஊறிக்கசியாத விதத்தில் அடித்தரை அமைக்கப்படவேண்டும்
4. மக்கள் குடியிருக்க செய்வதற்காக உத்தேசிக்கப்படும் ஒவ்வொரு அறையும் வெளிப்புறத்துக் காற்றுடன் நேரடியாக சம்பந்தப்படுவது மூலமாக காற்று நன்றாக வரும் பொருட்டு போதுமான ஜன்னல்களையும் ஏற்படுத்தி வைக்கவேண்டும்.
5. சமையல் அறையில் நெருப்பு மூட்டப்படும் ஒவ்வொரு இடத்திலும் எரியும் இடத்திற்கு நேர் மேல்ாகம் புகையோ நெருப்பு பற்றியுள்ள பொருள்களாவது வெளியே போவதற்கு செங்கற்கட்டு அல்லது நெருப்பு பற்றி எரியாத பொருள்களாவது புகைபோக்கும் கட்டப்பட வேண்டும்
6. வராந்தாவில் வீட்டிறப்பு (Eaves) வரும்போது அதன் உயரம் 2.13மீ குறைவாயிருத்தல் கூடாது
7. கழிவறைகளை சுத்தம் செய்ய சுத்திகரிப்பாளர் செல்ல வசதியான தனிப்பாதை அமைக்க கவனம் செலுத்தப்படவேண்டும்.
8. பாதாள சாக்கடை வசதியுள்ள பகுதியில் கட்ட உத்தேசிக்கும் கட்டிடங்களுக்கு மாநகராட்சி பொறியாளர் இலாகாவின் மேற்பார்வையில் பாதாள சாக்கடை மலப்பிறை அமைக்கப்படவேண்டும்.
9. கட்டிடத்திலுள்ள மழைத்தண்ணீரும் அழுக்குத் தண்ணீரும் மற்றும் சாக்கடை தண்ணீரும் நன்றாக சந்து போவதற்க்காக சாதனங்கள் ஏற்படுத்தி வைக்க வேண்டியது அல்லாமல் அவை பாதாள சாக்கடையில் மனுதாரரின் செலவிலும் மாநகராட்சி பொறியாளர் இலாகாவின் மேற்பார்வையிலும் இணைக்கப்படவேண்டும்
10. கட்டிடத்திற்கும் மின்சார கம்பிகளுக்கும் இடைப்பட்ட இடைவெளி அதற்குரிய விதிகளில் கண்டபடி விடப்படவேண்டும்
11. மதுரை மாநகராட்சி சட்டம் 128வது பிரிவின்படி கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடிவந்த இவற்றில் எது முந்தியோ அதிலிருந்து 15 தினங்களுக்குள் ஆணையாளர் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் இந்த நிபந்தனையை மீறுபவர்கள் ரூ.1000 வரை அபராதம் விதிக்கப்படத் தக்கவராவர்
12. தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 26 மற்றும் 33வது பிரிவுகளின்படி சாக்கடை வசதி செய்யப்பட்டிருப்பது போதுமானது என மாநகராட்சி நல அதிகாரி அவர்களிடமிருந்து அத்தாட்சி பெறவேண்டும்
13. கட்டிட இடிபாடுகள் நிமித்தம் ஏற்படும் கழிவு பொருட்கள் மற்றும் கட்டிட தளவாடச் சாமான்களை தெருவிலோ பாதையிலோ கொட்டுவதை தவிர்க்க வேண்டும்.
14. ஒழுங்கீன முறைகள் கையாண்டோ அல்லது செய்தியை மாறுபாடாக எடுத்துக் கொள்ளும் வகையில் தெரிவித்தோ அல்லது ஏமாற்றுதலாகவோ அல்லது திரித்துக் கூறியோ அல்லது இது போன்ற இதர காரணங்களாலோ உத்தரவு பெறப்பட்டது என்று நிர்வாக அதிகாரியின் கவனத்திற்கு தெரிய வந்தால் இரு உத்தரவும் ரத்து செய்ய ஏதுவாகும்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate